## விவசாயப்படைக்கு தமிழர் ஆதரவில்லை

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (7-2-67) இதழ் 358
பராபவ தை 25 ஷவ்வால் 26 செவ்வாய்க்கிழமை

## 75,000 மனுக்களில் வடக்கு, கிழக்கு மனுக்கள் பத்துக்கூட இல்லையாம்

கொழும்பு, திங்கள்

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ள விவசாயப்படையில் சேருவதற்கு இதுவரை எழுபத்தையாயிரம் இளைஞர் மனுச் செய்துள்ளனர். நேற்றுமட்டும் ஐந்நூறு பேர் மனுச் செய்திருக்கின்றனர். ஆனால் இந்த மனுக்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து பத்துக்கூட வந்து சேரவில்லையென்று அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

விவசாயப் படையில் சேருவதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும். இன்னும் இரண்டு மூன்று தினங்களில் விவசாயப்படையில் சேர்வதற்காக மனுச் செய்வோரின் தொகை லட்சக்கணக்காகிவிடுமென உணவு விவசாய இலாகாவும் காணி அமைச்சும் எதிர்பார்க்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இதுவரை விவசாயப்படையில் சேர்வதற்கு ஆதரவு கிடைக்கவில்லையெனினும் இன்னும் சில தினங்களுக்குள் பெருந்தொகையான மனுக்கள் வந்து சேரக் கூடுமெனத் தமிழரசுக்கட்சியைச் சேர்

(8-ம் பக்கம் பார்க்க)

# பதுக்கலைத் தடுக்க பொலிசுக்கு அதிகாரம்

## வர்த்தக நிலையங்களில் மேற்பார்வை செய்வர்

கொழும்பு, திங்கள்

அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம் சம்பந்தமாக வர்த்தக நிலையங்களிலும் வை நோக்குச் சங்கக் கடைகளிலும் மேற்பார்வை செய்வதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாடுபூராவிலுமுள்ள பொலிசாருக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இதற்கான உத்தரவை நேற்றுப் பிற்பகல் பிறப்பித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பதுக்கல் செய்வோர் மீதும் உணவுப் பொருட்களின் கொள்ளை லாபம் அடிப்போர் மீதும் உணவு இலாகா அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பொலிசார் உதவியாக வுமிருப்பர்.

உணவு இலாகா உத்தியோகத்தர்களுக்கு உதவிபுரியவும் கொள்ளை லாபம், பதுக்கல்களைக் கண்டு பிடிக்கவும் பொலிஸ் நிலையங்களில் தனிப்பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

## 'தேசிய ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது'

### பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பெருமிதம்

பளை, திங்கள்

"பல வருடங்களாக அந்நியரின் ஆட்சியின் கீழ் அகப்பட்டு வந்த நாம் பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் சுதந்திரம் பெற்றோம். ஆனாலும் கடந்த வருடங்களில் சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் பூரண திருப்தியுடன் கொண்டாடவில்லை. ஆனால் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் இம்முறை தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதில் இந்த தேசிய ஒற்றுமை சகல இன மக்களிடையேயும் ஏற்பட்டு விட்டதை உணர்த்துகின்றது"

பளை மகாவித்தியாலய முன்றலில் நடைபெற்ற சுதந்திர தின வைபவத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி திரு. வ. கந்தசாமி பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

பளை மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். இராசநாயகம் பேசுகையில் "அந்நிய ஆட்சியில் இருந்து விடுபட்டது மட்டும் சுதந்திரமல்ல" என்றார். மற்றும் பலரும் பேசினர்.

## விஞ்ஞான ஆய்வு கூடத்தில் கட்டாக்காலி மாடுகள்

புத்தளம், திங்கள்

விஞ்ஞான ஆய்வுகூடத்துக்காக கட்டப்பட்ட கட்டடத்துக்குள் கட்டாக்காலி மாடுகளும், நாய்களும் அழுகு படுத்திக் கொண்டிருக்கின்றன.

34,000 ரூபாய் செலவில் 1966-ம் வருடம் கட்டி முடிக்கப்பட்ட சாந்த அந்திரேயாவின் விஞ்ஞான ஆய்வு கூடத்துக்குத்தான் இப் பரிதாபகரமான நிலை ஏற்பட்டுள்ளது.

விஞ்ஞானம் கற்பிப்பதற்குரிய ஆசிரியர்கள் இங்கு இருந்தும் இந்த ஆய்வுகூடம் பாவிக்கப்படாத நிலையிலிருப்பதால் மாணவர்களும் பெற்றோர்களும் பெருத்த அதிருப்திக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது.

பஞ்சாப்

## தேர்தல் மோதலில் மூவர் சுடப்பட்டனர்

### அரசியல் ஊர்வலங்களுக்கு பீகாரில் தடையுத்தரவு

ஜலந்தூர், பெப். 6

பஞ்சாப் நகரான ஜலந்தூருக்கருகிலுள்ள பிவானி என்னுமிடத்தில் நிகழ்ந்த தேர்தல் சம்பவமொன்றில் மூவர் படுகாயத்துக்குள்ளாயினர். காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களுக்கும் எதிர்க்கட்சி ஒன்றின் ஆதரவாளர்களுக்குமிடையே கலோகங்கள் பரிமாறப்பட்டதாகவும் அதைத்தொடர்ந்து காங்கிரஸ் ஆதரவாளர்கள்மீது எதிர்க்கட்சியினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் பொலிசார் அறிவித்தனர். குண்டுக்காயங்கள் பட்டமூவரும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

பீகார் ராஜ்யத்தில் அரசாங்கம், அரசியல் கட்சிகளின் சகல ஊர்வலங்களுக்கும் தடைவிதித்துள்ளது. இதற்குக்காரணம் அங்கு தேர்தல்பொழுது ஏற்பட்ட பரபரப்பு ஏற்பட்டுள்ளதேயாகும். (பி டி ஐ)

## ஆகட்டும் பார்க்கலாம்,

சென்னை, பெப். 5

பாரதத்தில் நடைபெற விருக்கும் தேர்தல் பற்றி காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரிடம் அமெரிக்க பிரபல பத்திரிகையொன்றின் நிருபர் கேள்வி கேட்டபோது காமராஜர் அளித்த பதில் இதுதான்" "ஆகட்டும் பார்க்கலாம்"

## 1200 சீனர் தாயகம் வந்தனர்

பீகிங், பெப். 6

இந்தோனேஷியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட 1200 சீனர்கள் தாயகம் வந்துசேர்ந்தார்கள். அங்கிருந்து வெளியேற்றப்பட்டவர்களில் இவர்கள் மூன்றாவது கோஷ்டியாகும்.

இந்தக் கோஷ்டி இங்கு வந்து சேர்ந்தபோது மா—சே—துங்கின் ஆதரவாளர்கள் உற்சாகமான வரவேற்பளித்தனர்.

## 125 வயதில் மரணம்

சுழிபுரம், திங்கள்

சித்தன்கேணியைச் சேர்ந்த இராமு சைக்கெண் பிள்ளைக்குட்டி என்னும் 125 வயது மூதாட்டி சித்தன்கேணியிலுள்ள தனது இல்லத்தில் நேற்றுப்பகல் காலமானார். இப்பாட்டி பிள்ளைகள் கொஞ்சிக்குலவக் கொண்டிருக்கையில் காலமானார். இவரின் வழித் தோன்றலாக ஒன்பது குடும்பங்கள் உள்ளன. இறக்கும் நேரம் வரை நேற்றுவரை மிக ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும், நல்ல நினைவுடனும் இவர் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குறைந்தவிலைச் சாப்பாட்டுக்கடை

பண்டாரநாயக்காவின் அளவு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து சாப்பாடு ஹோட்டல்களிலும் உணவு விடுதிகளிலும் சாப்பாட்டின் விலை உயர்த்தப்பட்டிருப்பதாலும் சாப்பாட்டுக்குச் சில இடங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாலும் நியாய விலையில் சாப்பாடு வழங்குவதற்கான கடைகளைத் திறக்க சிற்றுண்டு இலாகா தீர்மானித்திருக்கிறது.

கடந்த யுத்தகாலத்தின்போது நிறுவப்பட்டது போல திறக்கப்படவிருக்கும் இக்கடைகளில் முதலாவதுகடை காலியில் திறக்கப்படவிருக்கிறது.

## மூன்று மாகாணங்கள் எதிர்ப்பாளர் கட்டுப்பாட்டில்

ஹாங்காங், பெப். 6

திபெத் தவிர தென்மேற்குச் சீனாவில் மூன்று மாகாணங்கள் நகரினத் தலைவர் மா-சே-துங்கின் எதிர்ப்பாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக வெளிவந்த செய்திகளை நகரின செய்திஸ்தாபனமும் ஊர்ஜிதம் செய்திருப்பதாகத் தெரிகிறது.

ஷங்காயின் நிர்வாகத்தை மீண்டும் தங்கள் பொறுப்பில் எடுக்கும்பொருட்டு கட்சி அலுவலகமும், அரசாங்க அலுவலகமும் மக்கள் 'கம்யூன்'களை அமைத்துள்ளன.

சீனாவில் மா-சே-துங் கொள்கைக்கான எதிர்ப்புக் காரணமாக தோன்றியுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

## ஒரே தொகுதியில் போட்டியிடும் மூன்று அபேட்சகர்கள்

### ஒரே மேடையில் தோன்றினர்கள்

மதுரை, பெப். 6

இந்திய தேர்தல், பிரசார சரித்திரத்தில் ஒரே தொகுதியில் போட்டியிடும் மூன்று வெவ்வேறு கட்சி அபேட்சகர்கள் ஒரே மேடையில் தோன்றி தங்கள் தங்கள் கொள்கைகளை எடுத்துக் கூறிய சம்பவம் நேற்றுமாலை மதுரையில் நடைபெற்றது.

மதுரை கோசளைத் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் அபேட்சகர் திரு. எஸ். சின்னக்கறுப்பன், கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சி அபேட்சகர் திரு பி. ராமமூர்த்தி, ஜனசங் வேட்சகர் திரு. ஜனசிராம் ஆகிய மூவருக்கு ஒரே மேடையில்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலங்கையில் இலவச அரிசி; இந்தியாவில் யானை விலைக்கும் இல்லை'

## வடபழனியில் தேர்தல் பிரசார சுவரொட்டி

### "ராஜாஜி நீடுவாழ காங்கிரஸ் வெற்றி பெறவேண்டும்" பக்தவத்சலம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

'இலங்கையில் அரிசி இலவசம்-இங்கு யானை விலைக்கும் அரிசி கிடைக்கவில்லை'- இப்படி வட பழனி கோவில் பின்புற சுவரில் எழுதப்பட்டிருக்கிறது. இதுபோல் நூற்றுக்கணக்கான சுலோகங்கள் சென்னை சுவர்களிலெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. வேறு ஒரு சுவரில் காமராஜ் அண்ணாச்சி, காப்பியில்லை என்னாச்சு என்று காப்பியில்லை குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. இங்கு அரிசி மட்டுமல்ல காப்பி, சர்க்கரை (சீனி) மிளகு எல்லாவற்றிற்கும் தட்டுப்பாடு தான். காலை 6 மணி முதல் நூற்றுக்கணக்கான மக்கள் பல மணி நேரம் ரேஷன் கார்டு(கூப்பன்)டன் தவம் கிடக்கிறார்கள். பாலுக்கு கூட இந்த நிலைதான். கூப்பன் கடைகளிலே அரிசி கிடையாது. தனிப்பட்டவர்களிடம் 1 படி 3 ரூபாவாக வாங்கலாம். இப்படியான உணவுத்தட்டுப்பாடு நிலைமை எதிர்ப்பு அணியினருக்கு சாதகமாக அமைந்துவிட்டது. இப்பொழுது எதிர்ப்பு அணியினரின் முக்கிய பிரசாரம், ஒரு ரூபாவிற்கு ஒரு படி அரிசி என்பதுதான். கல்வியும், இனிமார்க்கெட்டும் தேசிய மயமாக்குவதன் மூலம் 1 ரூபாவிற்கு 3 படி அரிசி கொடுப்போம் என தி. மு. க. தலைவர் மதியழகன் பேசியுள்ளார்.

திருப்பதியில் நேற்றிரவு காங்கிரஸ் தலைவர் காமராஜர் பேசிய பொதுக்கூட்டத்தில் கல்லெறியப்பட்டதைத் தொடர்ந்து சென்னையில் உடனடியாக பரபரப்பு ஏற்பட்டது. காமராஜருக்கு நெற்றியில் காயமேற்பட்டுள்ளதாக, உடனடியாக சுவரொட்டிகள் மூலம் அறிவிக்கப்பட்டது. இதனால் சென்னையில் ஏதாவது அசம்பாவிதம் நடக்குமோ என அஞ்சி, பொலிஸார் முன்னெச்சரிக்கையாக ரோந்து சுற்றி வருகின்றனர். காமராஜருக்கு காயம் ஏற்படவில்லை. இப்பொழுதெல்லாம் சென்னை நகர் எங்கும் விடிய விடிய ஜனநடமாட்டந்தான். சுலோகம் போடுகிறவர்கள் ஒருபுறம், சுவரொட்டி ஒட்டுகிறவர்கள் மறுபுறம், கொடி கட்டுகிறவர்கள் இன்னொரு புறம், வீடுவீடாக ஓட்டுவேட்டையாடுபவர்கள் வேறு ஒருபுறம் இப்படியே சென்னை நகரம் எந்நேரமும் ஜனநடமாட்டத்துடன் காட்சியளிக்கிறது.

**ராஜாஜி வாழ காங்கிரசுக்கு வோட்டு**

சென்னை முதல் மந்திரி பக்தவத்சலம் ஆத்தூரில் பேசிய ஒரு கூட்டத்தில் மிகவும்

(5-ம் பக்கம் பார்க்க)

# உலக அரங்கில்

**ருமேனியாவின் சுதந்திர நிலை**

வியென்னா, பெப்.6

கிழக்கு ஜெர்மனியின் பத்திரிகைக் கண்டனத்துக்கு ருமேனியா பதில் அளித்துள்ளது. வார்சா ஒப்பந்த நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டில் தனது அக்கறையின்மையைக் காட்டியதன் மூலம், வார்சா ஒப்பந்தத்துக்குள் தனது சுதந்திர நிலையை ருமேனியா மீண்டும் பிரகடனப் படுத்தியுள்ளது. (பி.டி.ஐ.)

**பிரெஷ்னேவ் விஜயம்**

பிராக், பெப்.6

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் லியோனிட் பிரெஷ்னேவ் தற்போது செக்கோஸ்லாவேக்கியாவில் [illegible] பூர்வமான விஜயம் செய்து வருகிறார். (பி.டி.ஐ.)

**நாடு கடத்தல்**

கின்ஷாஸா, பெப்.6

இரண்டு பிரெஞ்சுக்காரர், ஒரு பெல்ஜியர், ஒரு இந்தியர் ஆகிய நான்கு பேரைக் கொங்கோ அரசாங்கம் நாடு கடத்தியுள்ளதாகக் கொங்கோ உத்தியோகபூர்வமான செய்தித்தாபனம் அறிவித்துள்ளது. (பி.டி.ஐ.)

**கோஸிஜினுக்கு அழைப்பு**

பாக்தாத், பெப்.6

ஈராக்குக்கு விஜயம் செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பொன்றைச் சோவியத் பிரதமர் அலெக்ஸி கோஸிஜின் ஏற்றுள்ளதாகவும் விஜயத்துக்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லையெனவும் இங்கு அறிவிக்கப்பட்டது. (பி டி ஐ)

**எச்சரிக்கை**

வாஷிங்டன், பெப்.6

வியட்நாம் போர் விரைவில் முடிவுறாவிட்டால், அமெரிக்கா பாரதூரமான நிதி நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி வருமென ஜனநாயக கட்சியைச் சேர்ந்த கொனெக்டிகட் செனட்டர் ரிபிகொவ் எச்சரித்துள்ளார். (பி டி ஐ)

**பதவி உயர்வு**

சைகோன், பெப்.6

தென் வியட்நாமின் புதிய பாதுகாப்பு மந்திரி காவோ வான் வியன் லெப்டினன்ட் ஜெனரல் பதவியிலிருந்து முழு ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளதாக இங்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (பி டி ஐ)

**வருடம் 500 பேர் மரணம்**

சிக்காகோ, பெப்.6

அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்படும் டிராக்டர் விபத்துக்களில் 500 பேருக்கு மேல் உயிரிழப்பதாக தேசிய பாதுகாப்புச்சபை அறிவித்துள்ளது. (பி.டி.ஐ.)

**கோப்பி சப்ளையில் வெட்டு**

லண்டன், பெப்.6

கோப்பியின் உலக சப்ளையில் உடனடியாக இருபது லட்சம் பைகள் வெட்டப்படவேண்டுமென, இங்கு சந்தித்த சர்வதேச கோப்பி இயக்கச்சபை தீர்மானித்துள்ளது. (பி.டி.ஐ.)

**'சலுகைகளால் பயனில்லை'**

பாரிஸ், பெப்.6

ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளுக்கும் ஆபிரிக்க நாடுகளுக்குமிடையேயான விசேஷ வர்த்தக உடன்படிக்கைகளுக்கு ஒரு முடிவு காணுமாறு பிரேஸில் வர்த்தக மந்திரி கோலோ எடியோ மாக்டுனல் இங்கு கேட்டுள்ளார். ஆபிரிக்க நாடுகளுக்கு ஐரோப்பிய பொதுச்சந்தை அளித்துள்ள சலுகைகள் எதுவித பயனையும் அளிக்கவில்லையெனவும் மாறாக அவை சர்வதேச வர்த்தகத்தைப் பாதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (பி.டி.ஐ.)

**கோரக்கொலை**

கராச்சி, பெப்.6

இங்கு 650 மைல் வடக்கிலுள்ள புக்டாஸ் என்னுமிடத்தில், ஆயுதந்தாங்கிய 20 பேரடங்கிய கோஷ்டி ஒன்று வீடொன்றை உடைத்து நுழைந்து, ஒரு மனிதனையும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த நால்வரையும், இரண்டரை வயதுப் பேரக் குழந்தை ஒன்று உட்பட, கட்டுக்கொலைசெய்தனர். ஒரு வருடத்துக்கு முன் நடந்த கொலையொன்றுக்குப் பழிவாங்கவே இக்கொலைகள் நடைபெற்றதாகத் தெரிகிறது. (பி.டி.ஐ.)

**எதிர்பாராத லாபம்!**

நியூயோர்க், பெப்.6

புளோரிடாக் கடலில் மூழ்கிய ஒரு ஸ்பானிய கப்பலிலிருந்து எடுக்கப்பட்ட 18ம் நூற்றாண்டைய பொக்கிஷங்கள், இங்கு 200,000 டொலருக்கும் அதிகமான விலைக்கு ஏலத்தில் விற்கப்பட்டன. (பி.டி.ஐ.)

**32பேர் விடுதலை**

கராச்சி, பெப்.6

டாக்காவிலுள்ள கிழக்குப் பாகிஸ்தான் அரசாங்கம், பாகிஸ்தான் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்ட அரசியல் கைதிகள் [illegible]டுள்ளது. (பி.டி.ஐ.)

## சோவியத் பிரதமரின் பிரிட்டிஷ் விஜயம்

லண்டன், பெப். 6

சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் இன்று லண்டன் வந்து சேர்கிறார். பிரிட்டனில் ஒருவார காலம் தங்கியிருக்கவிருக்கும் சோவியத் பிரதமர் மகாராணியையும் சந்திப்பார். பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சனுடன் நீண்டநேரம் பேச்சுவார்த்தை நடத்துவார்.

பதினொரு வருடங்களின் பின் பிரிட்டனுக்கு முதல் தடவையாக விஜயஞ்செய்யும் சோவியத் பிரதமர் பிரிட்டிஷ் பிரதமருடன் வியட்நாம் பிரச்சினை குறித்து ஆலோசனை நடத்துவார்.

நவீன உலகில் நடைபெறும் சம்பவங்கள், ஐரோப்பிய ஐக்கியம், ஆயுத [illegible] ஆகியவை பற்றியும் இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இரண்டுமாதத்தில் எம். ஜி. ஆர் மீண்டும் படத்தில் நடிப்பார்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

சென்னை, பெப்.6

தற்பொழுது சென்னை பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் பூரணசுகமாகியதும் சத்யா மூவீஸாரின் 'காவல்காரன்' என்ற படத்தில் நடிப்பார். அவர் பூரணகுணமாக இன்னும் இரண்டுமாதகாலமாகுமென்றும், இம்மாத முடிவில் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியபின் வீட்டில் ஒருமாதகாலம் ஓய்வு எடுப்பாரென்றும், அவரது குடும்ப டாக்டர் பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

டாக்டர் மேலும் தெரிவித்ததாவது: ராமச்சந்திரன் குணமடைந்து வருகிறார். குண்டுக்காயத்தினால் அவரது உடம்பில் எவ்விதமான கோளாறும் ஏற்படவில்லை. இன்னும் இரண்டுமாதகால ஓய்வுக்குப்பின் அவர் படங்களில் நடிப்பார்.

நடிகர் ராமச்சந்திரனை கலையுலகப் பிரமுகரும், அரசியல் தலைவர்களும் தினந்தோறும் பார்த்துவருகின்றனர். அங்கு வருபவர்களிடம் ராமச்சந்திரன் பேசிக்கொண்டிருக்கிறார். ஆனால் எவருடனும் நீண்டநேரம் பேசுவதில்லை.

நடிகை சரோஜாதேவி நேற்று மீண்டும் ராமச்சந்திரனைப் பார்க்கவந்திருந்தார். அச்சமயம் கே. ஆர். விஜயா, எஸ். என். லக்ஷ்மி, டைரக்டர் ராமண்ணா, பி. ஆர். பந்துலு, சித்திரா கிருஷ்ணசாமி ஆகியோரும் வந்திருந்தனர்.

ஒரு வெள்ளைக்காரப்பெண்ணும் எம். ஜி. ராமச்சந்திரனைப் பார்க்க வந்திருந்தார். அவர் ராமச்சந்திரனுக்கு முன்னால் சிலநேரம் உட்கார்ந்துகொண்டு ஜெபமாலை உருட்டிக்கொண்டிருந்தார்.

## மந்திரி கேட்டும் சிவாஜி பரங்கிமலை செல்லமறுப்பு

சென்னை, பெப். 6

பரங்கிமலைத் தொகுதிக்கு நடிகர் சிவாஜி கணேசன் தேர்தல் பிரசாரத்திற்குச் செல்லமாட்டார் என்பது நிச்சயமாகிவிட்டது. ஒரு மந்திரி உட்பட பல காங்கிரஸ் பிரமுகர்கள் வற்புறுத்தியும் சிவாஜி கணேசன் பிடிவாதமாக மறுத்துவிட்டாராம்.

பரங்கிமலைத் தொகுதிக்கு காங்கிரஸ் சார்பில் பிரசாரம் செய்ய ஏற்கனவே சிவாஜி கணேசன் ஒப்புக்கொண்டிருந்தார். நடிகர் ராமச்சந்திரன் சுடப்பட்டபின் அத்திட்டத்தை மாற்றிவிட்டார்.

தற்பொழுதுள்ள சூழ்நிலையில் [illegible] இருக்கும் நான் பரங்கிமலைக்குப் பிரசாரம் செய்ய வருவது நன்றான செயலல்ல என்று சிவாஜி தெரிவித்துவிட்டாராம். இருந்தபோதிலும் சிவாஜியை பரங்கிமலைக்கு அழைக்க இன்னும் மறைமுக ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

நடிகை பத்மினிகூட காங்கிரஸிற்காக பிரசாரம் செய்ய பரங்கிமலைக்குச் செல்லமாட்டார் எனக் கூறப்படுகின்றது.

## சுவரொட்டி தகராறில் இருவருக்கு கத்திக்குத்து

### சென்னையில் மீண்டும் பலாத்கார செயல்கள் தலைதூக்குகின்றன

சென்னை, பெப். 6

சென்னையில் சில நாட்களாக இல்லாமலிருந்த பலாத்கார சம்பவங்கள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. இதனால் மக்கள் பீதியடைந்துள்ளனர். லோன்றி, சலூன், தேநீர்க்கடை, ஹோட்டல்களில் 'தயவுசெய்து அரசியல் பேசாதீர்' என்று போர்டு மாட்டப்பட்டிருக்கிறது. ஹோட்டலில் சாப்பிட வருபவர்கள் பார்ப்பதற்காக வழக்கமாக வைக்கப்படும் தினசரிப் பத்திரிகைகள் இன்று முதல் அங்கு வைக்கப்படவில்லை.

சென்னையில் தி மு க சுவரொட்டிகள் ஒட்டுவதில் ஏற்பட்ட தகராறில் 2 பேர் நேற்றுக் கத்தியால் குத்தப்பட்டனர். உடனடியாக இருவரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். மைலாப்பூரைச் சேர்ந்த சங்கரன், ஜெயகுமார் ஆகிய இருவருமே கத்தியால் குத்தப்பட்டனர்கள். இவர்கள் இருவரும் தி மு கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் இருவரும் சேர்ந்து மயிலாப்பூரிலுள்ள செட்டி தெருவில் தி மு க சுவரொட்டிகளை ஒட்டச் சென்றனர். சங்கரன் [illegible] வடிவேலுவிடம் பசை கேட்டாராம். உடனே வடிவேலு அருகிலிருந்த காங்கிரஸ் அலுவலகத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வயோதிப ஆசிரியர்கள் தலைமையாசிரியராகக் கூடாது'

## டாக்டர் தகநாயக்கா கருத்து

காலி, திங்கள்

"ஓய்வு பெறவிருக்கும் வயோதிப ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படக்கூடாது. அவர்களது நாட்கள் போய் விட்டன. அவர்களால் வேலைசெய்யவும் முடியாது. இப்படி அவர்களை நியமிப்பது, குறிப்பிட்ட கல்லூரியின் அபிவிருத்தினைத் தான் பாதிக்கும்." காலி றிச்மண்ட் கலாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசிய உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யு. தகநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

ஒரு கல்லூரியின் பிரகாசமான எதிர்காலம் அதன் தலைமை ஆசிரியரையே பொறுத்துள்ளது. இந்தச் சாதாரண விஷயம் கல்வி இலாகாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அரசியல்வாதியின் விருப்பத்தின் பேரில் ஆசிரியர்களைத் தொலையாக இடமாற்றம் செய்வது, எந்தக் கல்லூரியினதும் கல்வியைப் பாதிக்கும். நிர்வாக நோக்கத்துக்காக அல்லது ஒழுங்கு நடவடிக்கை, சுகாதார அடிப்படைகளில் தேவையெனின் அன்றி, மற்றும்படி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படக்கூடாது. கல்லூரியின் இதர நடவடிக்கைகளில் பங்குபற்றுவது ஆசிரியர்களுக்கு அவசியம். அத்தகைய சேவை அவர்களது பதவி உயர்வின்போது கணிக்கப்பட வேண்டும்." இவ்வாறு அவர் மேலும் தமது பேச்சில் குறிப்பிட்டார். மற்றும் பலர் பேசினர்.

## சென்னை கோட்டைமுன் பொலிஸ் பாதுகாப்பு

சென்னை, பெப். 5

சென்னை கோட்டைமுன் தீக்குளிக்கப் போவதாக பொலிசாருக்கு கடிதமனுப்பியதைத் தொடர்ந்து கோட்டைமுன் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொலிசாருக்கு வந்த கடிதத்தில் தமிழ் ஆசிரியர் பாலசுப்பிரமணியம் கரூர் என்று குறிப்பிட்டிருந்தது.

## நீதிமந்திரி 22-ம் திகதி விஜயம்

மாவிட்டபுரம், திங்கள்

நீதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா இம்மாதம் 22-ம் திகதி வட பகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருக்கிறார்.

வடபகுதியில் சேமிப்பு இயக்க வாரத்தை ஆரம்பித்து வைக்கும் பொருட்டு இங்கு வரும் அமைச்சருக்கு அமோக வரவேற்பளிக்கப்படும். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும் கூட்டத்திலும் அவர் உரை நிகழ்த்துவார்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை அமைச்சர் சென்று பார்வையிடுவார்.

## 'சமாதானமா போராட்டமா?'

யாழ்ப்பாணம், செவ்.

'சமூக அமைப்பு முறையை அப்படியே ஏற்றுக்கொண்டு, அந்த அமைப்பு முறைக்கு உள்ளடங்கிய சாதி முறையை நீக்கிவிட முயற்சிப்பதென்பது நடைமுறைக்குச் சாத்தியப்படாததொன்றாகும். சமூகத்தில் உள்ள சகல சுகபோகங்களையும் அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள் தங்கள் சுகபோகங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போர்த்திக்கொள்ளும் போர்வையே சமாதான மாற்றமென்ற கொள்கையாகும். இந்தக் கொள்கையை அப்படியே ஒப்புக்கொண்டு இந்தச் சமாதான மாற்றத்தில் முழு நம்பிக்கையும் வைத்துக் கொண்டிருப்பவர்கள் முடிவில் ஏமாற்றத்தையே அடைவார்கள்.

இவ்வாறு சனிக்கிழமை மாலை கொட்டடி சத்திரவீதியில் நடந்த கூட்டமொன்றில் சிறுகதை எழுத்தாளர் திரு. கே. டானியல் பேசுகையில் குறிப்பிட்டார். சமாதானமா? போராட்டமா? என்ற தலைப்பில் இவர் பேசினார். (ந.நி)

## சுவரொட்டி .....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மசை வாங்கிவந்து கொடுத்தாராம். அதையை வாங்கிய சங்கரன், வடிவேலு வீட்டு சுவரிலேயே திமுக சுவரொட்டியை ஒட்டினாராம். இதை வடிவேலு தடுத்தாராம். இதன் காரணமாக ஏற்பட்ட தகராறில் இருவரும் கத்தியால் குத்தப்பட்டனர். வடிவேலுவைப் பொலிசார் கைதுசெய்தனர்.

திருப்போரூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் மணிவர்மா என்பவர் கல்லால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்றிரவு மத்த மணிக்குக் கூடுவாஞ்சேரியில் அவர் வோட்டு வேட்டையாடியபோதே இச்சம்பவம் நடந்தது. மாணவ, மாணவிகளும் அவருடன் சென்ற

## போட்டி முடிவு

உடுவில், திங்கள்

சுதந்திரதின விழாவை ஒட்டி உசன் இராம முன்னேற்றச் சங்கத்தாரால் நடத்தப்பட்ட பார்வையாளர் மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை எஸ். சிவசம்புவும் இரண்டாம் இடத்தை திரு. க. இன்னத்துரையும், மூன்றாமிடத்தை திரு. ச. ஜெயராஜேஸ்வரமணியும் பெற்றனர். உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் விழாவிற்கு தலைமை வகித்தார்.

மற்றும் இருவர்களையும் அதிகுள்ளனர்கள் அடித்துக்காயப்படுத்தினர்களாம்.

## நம்பிக்கை மோசடி செய்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், செவ்.

[illegible] என்ற இடத்தைச் சேர்ந்த சுப்பையா என்பவரது 850 ரூபா பெறுமதியான 1 ஜோடி தங்க [illegible] வைத்த போது நம்பிக்கை மோசடி செய்ததாக நாவாந்துறையைச் சேர்ந்த சி.பி. ஜோசப் என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. வி. நவரத்தினராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் மேல் விசாரணைக்காக மீண்டும் ஏப்ரல் மாதம் 27-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந.நி.)

50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.




உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க் காணும் கார்களை வாங்க சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

சீட்டிழுப்பு இல. 128. தேதி 10 பெப்ரவரி 1967
புத்தம் புதிய போர்ட் அங்கிளியா ரூ. 12,505/-



சீட்டிழுப்பு இல. 128

சீட்டிழுப்பு இல. 129. தேதி 16 பெப்ரவரி 1967
புத்தம் புதிய ட்ரயம்ப் ஹெரல்ட் ரூ 15,250/-



சீட்டிழுப்பு இல. 129

இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கம்பெனி பட்டியல் விலைகளாகும்.
இக்கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாட்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவுப்பகுதி எம். பி. வாக்களிக்கமாட்டார்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை தமிழரசுக்கட்சி ஆதரிப்பதென்று முடிவு செய்திருந்தபோதிலும் தாம் வாக்களிப்பின் போது கலந்து கொள்ளாமல் இருந்து விடப்போவதாக தமிழரசுக்கட்சி பிரமுகரும், தீவுப்பகுதி எம்.பி யுமான திரு. வி. நவரத்தினம் பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். கட்டாய நாடு கடத்தலுக்கு இந்திய வம்சாவழியினர் உட்படுத்தப்படுவார்கள் என்று தாம் கருதுவதன் காரணமாகவே தாம் இவ்வாறு செய்யப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## கட்டாய நாடு கடத்தலும் தனி இடாப்பும் இல்லை

### தமிழரசு ஆதரிப்பதின் காரணம்: நாகநாதன் விளக்கம்

டாக்டர் நாகநாதன் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதா மீது இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் பேசும்போது, பின்வருமாறு குறிப்பிட்டார்:-

ஒரு மனிதனை வலுக்கட்டாயமாக ஒரு நாட்டின் பிரஜையாக்கிவிட முடியாது. அதுபோலவே ஒரு மனிதனை வலுக்கட்டாயமாக நாடுகடத்தவும் முடியாது. தன்னிச்சையாகவே இது செய்யப்பட வேண்டும் இந்த அரசாங்கம் கட்டாய நாடுகடத்தலை ஆதரிக்கவில்லை. அதன் காரணமாகத்தான் நாங்கள் மசோதாவை ஆதரிக்கின்றோம். முந்திய அரசாங்கம் கட்டாய நாடுகடத்தலைச் செய்ய உத்தேசித்திருந்தது. அதையும் முன்னர் நாங்கள் எதிர்த்தோம். ஒப்பந்தத்தை நாம் முன்னர் எதிர்த்தோம். மேலும் பிரஜாவுரிமை பெறும் இந்திய வம்சாவளியினருக்கு தனியான இடாப்பு வைப்பதும் இல்லை. ஆனால் முந்திய அரசாங்கம் அப்படி உத்தேசித்திருந்தது.

இந்தக்காரணங்களை உத்தேசித்து நாங்கள் மசோதாவுக்கு திருத்தம் ஒதுவும் கொண்டுவரப்போவதும் இல்லை.

### மந்திரிசபைக்கு அறிவிப்பு

தமிழரசுக்கட்சி மசோதாவுக்கு எதுவித திருத்தமும் கொண்டுவரப் போவதில்லை என்று முடிவுசெய்ததுபற்றி மந்திரிசபைக்கு உள்ளூராட்சி மந்திரி திருச்செல்வம் அறிவித்தார்.

நாளை நண்பகல் 1 மணிக்கு பிரதிநிதிகள்சபை மீண்டும்கூடி மசோதா மீதான விவாதத்தை நடத்தும்.

தனிவாக்காளர் இடாப்பு

## சுதந்திரக்கட்சி வலியுறுத்தாது

பிரஜாவுரிமை பெறும் இந்திய வம்சாவழியினர் சம்பந்தமான தனி வாக்காளர் இடாப்பு இருக்க வேண்டுமென்பதை தமது கட்சி வலியுறுத்தப் போவதில்லையென்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பிரமுகரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பிரதிநிதிகள் சபையில் இன்று அறிவித்து ஆச்சரியத்தை ஏற்படுத்தினார்.

திருமதி பண்டாரநாயக்கா பிரதமமந்திரியாக இருந்தபோது அப்போது இந்தியப் பிரதமராக இருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இலங்கையில் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற ஒரு சாராரை ஏற்படுத்த தாம் விரும்பவில்லை என்று குறிப்பிட்டிருந்ததாக திரு. பீலிக்ஸ் சபையில் கூறினார்.

நாங்கள் கணிப்பதெல்லாம் பிரஜாவுரிமை பெறும் இந்தியர்கள் 3 லட்சம் பேரும் ஒரே பகுதியில் இருக்கநேருமானால் ஒரே பகுதியில் அவர்களின் வாக்குப்பலம் அமைந்துவிடும் அதனால் பிரதேசங்களின் வாக்குப் பலம் பாதிக்கப்படும். இந்த நிலைமையை சமாளிக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று திரு. டயஸ் கோரினார்.

அதிகமானதேர்தல்தொகுதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இதனால் எல்லோருக்கும் சமபிரதிநிதித்துவம் இடைக்க வழிபெறப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மசோதாவை வரவேற்றுப் பேசிய திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இந்த விஷயத்தில் அரசாங்கத்துக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்றும் வாழ்த்தினார்.

நாலு விதமான வாக்காளர் இடாப்புகள் இருக்க வேண்டும் என்று திரு. பீலிக்ஸ் விளக்கினார். (1) இலங்கை பிரஜாவுரிமை கேட்டு கொடுக்கப்பட்டிருப்பவர்கள். (2) ஏற்கனவே பிரஜாவுரிமை கேட்டு கொடுக்கப்பட்டவர்கள். (3) இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படவிருப்பவர்கள் பற்றிய விபரங்கள் அடங்கியது. இதை இந்திய ஸ்தானிகராலயம் வைத்திருக்கவேண்டும். (4) ஏற்கனவே இந்தியாவுக்கு திரும்பியவர்கள் பற்றிய விபரங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

---

புதுடில்லி, பெப் 5

அந்தமான் தீவில் றப்பர் ஆராய்ச்சி நிலையமொன்றை அமைக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டது. 835 ஏக்கரில் றப்பர் செடி பயிரிடப்பட்டுள்ளது. இன்னும் பயிரிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இலங்கை, பர்மாவிலிருந்து வரும் இந்திய வம்சாவழியினர் இத்தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவர்.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதா

# வாககளிப்பின் முன்னர் தெரிவுக்குழு ஆராயும்

—பிரதமர்

## திருத்தமின்றி ஆதரிக்க தமிழரசுக்கட்சி முடிவு

கொழும்பு, ஞாயிறு

**இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை எதிர்க்கட்சியினர் ஆதரித்து வாக்களிப்பதற்கான அறிகுறிகள் இன்று பிரதிநிதிகள்சபையில் தென்பட்டன.**

எதிர்க்கட்சியின் முக்கிய பேச்சாளரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசும்போது எதிர்க்கட்சியினரின் ஆதரவை வெளிப்படுத்தினார். ஆனால் மசோதாவுக்கு எதிர்க்கட்சியினர் சில திருத்தங்களை கொண்டுவருகின்றார்கள்.

தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை மசோதாவுக்கு எதுவித திருத்தங்களும் கொண்டுவராமலே ஆதரித்து வாக்களிப்பார்கள் என்பது அதன் முக்கிய பேச்சாளரான டாக்டர் நாகநாதன் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து அறியமுடிந்தது.

பிரதமமந்திரி திரு. டட்லிசேனநாயக்கா விளக்கம் ஒன்று தருகையில் மசோதா இறுதியாக நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பார்லிமெண்டின் தெரிவுக்குழு ஒன்றின் பரிசீலனைக்கு அது சமர்ப்பிக்கப்படும் என்றும், எல்லா கருத்துகளுக்கும் மதிப்பளிக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா எதிர்க்கட்சிகளின் சார்பில் சில திருத்தங்களைப் பிரேரித்தார்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் 3 லட்சம் பேருக்குமட்டுமே பிரஜா உரிமை கொடுக்கப்படும் என்றும் 15 வருட காலத்தில் இவர்களுக்கு அந்த உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்றும், அதேசமயம் 5 லட்சம் 25 ஆயிரம் பேர் இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்படுவார்கள் என்பதும் மசோதாவில் தெளிவாக இடம்பெற வேண்டும் என்றும் அவர் தமது திருத்தப் பிரேரணையில் கூறினார்.

இந்த புள்ளிவிபரங்கள் கட்டாயம் மசோதாவில் இடம்பெறவேண்டுமென்றில்லையென்றும் பிரதமமந்திரி விரும்பினால் எவ்வளவுபேருக்கு வேண்டுமானாலும் பிரஜாவுரிமை கொடுக்கமுடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

'வருடத்துக்கு

## 35,000 தமிழரை அனுப்பியிருக்கலாம்'

கம்பளை, சனி

"இந்திய-இலங்கைப் பிரச்சினையை ஒருவராலும் தீர்க்க முடியாத சமயத்தில் நான் முன்வந்து, 525,000 இந்தியர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப இந்திய அரசாங்கம் ஒப்புக் கொள்ளும் ஒப்பந்தம் ஒன்றை இந்திய அரசாங்கத்துடன் கைச்சாத்திட்டேன். அதனால் தான், நாட்டின் பணக்கார வர்க்கத்தினர் தமிழருடன் சேர்ந்து சுதந்திரக் கட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்கத் திட்டமிட்டனர். இன்று இதன் விளைவு என்னவெனில், அந்த ஒப்பந்தப் பிரகாரம் ஒரு தமிழராவது இலங்கையிலிருந்து அனுப்பப்படவில்லை."

இவ்வாறு, உலப்பனையில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறினார்.

சுதந்திரக் கட்சி அதிகாரத்தில் இருந்தால், வருடத்துக்கு 35,000 தமிழரை இந்தியாவுக்கு அனுப்ப ஒழுங்கு செய்திருக்குமென்றும், இரண்டு வருடங்களில் 75,000 தமிழர் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பர் என்றும், திரு. தொண்டமானுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் யு.என்.பி. அரசாங்கம் கடமைப் பட்டுள்ளதால், இதைச் செய்ய அவர்கள் பயப்படுகிறார்கள் என்றும் அவர் மேலும் பேசுகையில கூறினார்.

யாழ்ப்பாணம், திங்கள்

கடைக்கு வடை வாங்கச் சென்ற இணுவிலைச் சேர்ந்த 14 வயது இளைஞரான நடராஜா நவரத்தினராஜா என்பவர் காரொன்றினால் மோதுண்டு படுகாயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுசம்பந்தமாக கன்னுகம் பொலிஸார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர். (ந. நி.)

---

### ஒரேதொகுதியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதிகள் தங்கள் கட்சிக் கொள்கைகளை எடுத்துக் கூறினர்.

அரசியல் தலைவர்கள் ஆதரவுக் கூட்டம் அமைதியாக நடைபெற்றது [illegible] இடம்பெற்றது.

## 'சிக்கலான பிரச்னைகளையும் சுமுகமாகத் தீர்த்தார்'

### தணிகாசலத்துக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்

"இனமத கட்சி சார்பற்ற முறையில் தமது ஊக்கத்தினாலும், திறமையினாலும், விடாமுயற்சியினாலும் வெகு விரைவிலேயே பதவி உயர்வைப் பெற்றவர் வடமாநில வித்தியாதிபதியாகக் கடமையாற்றிய திரு. தணிகாசலம், பலசிக்கலான பிரச்சினைகளையும் சுமுகமான முறையில் தீர்த்துவைப்பதில் திறமைவாய்ந்த இவர் யாழ்ப்பாணக் கல்விஇலாகா நிர்வாகப் பகுதிக்கும், பரீட்சைப் பகுதிக்குமிடையிலிருந்துவந்த பல பழைய பிரச்சினைகளையும் நீக்கி ஐக்கியத்தை உண்டுபண்ணினார். இவரது நற்குணங்களைப் பின்பற்றி ஒவ்வொரு ஊழியர்களும் தமது கடமையைச் சரிவரச் செய்வார்களேயானால் நிர்வாகம் சிக்கலின்றி நடைபெற ஏதுவாயிருக்கும்."

மேற்கண்டவாறு வடமாநில வித்தியாதிபதியாகக் கடமையாற்றி இம்மாதம் 1ந் தேதி முதல் மட்டக்களப்புக்கு மாற்றலாகிச் சென்றுள்ள திரு. எஸ். தணிகாசலத்துக்கு யாழ்ப்பாணக் கல்வி இலாகா ஊழியர்களால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் யாழ்ப்பாணப் பிரதம கல்வி உத்தியோகத்தர் திரு. ஏ. ஞானசேகரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பாடிகோட் விடுதியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்வி இலாகா பிரதமகுமாஸ்தா திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை பேசுகையில் திரு. தணிகாசலம் கல்வி இலாகா ஊழியர்கள் மீது வைத்திருந்த அபாரநம்பிக்கையும், அதேவேளையில் அவர்கள் இவர்மீது வைத்திருந்த உண்மையான நம்பிக்கையுமே, இவரது பதவிக்காலத்தில் யாழ்ப்பாணக் கல்வி இலாகா சரியான முறையில் நடக்க வழிகோலியதென்று கூறினார்.

திரு. தணிகாசலம் தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரப் பிரியாவிடைக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

(ந நி)

---

### விவசாய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த ஒரு பிரமுகர் தெரிவித்திருக்கிறார்.

விவசாயப்படையின் முதற்பிரிவு ஐயாயிரம் வீரர்களைக் கொண்டிருக்கும். மார்ச் மாதத்தில் அமைக்கப்படவிருக்கும் இந்த முதற்பிரிவு புத்தளத்திலும் குருநாகலிலும் பதினைந்து அணிகளாக முகாமிடும்.

---

### மூன்றுமாகாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைகளை அடுத்து சிஙப்பூர்தாண்டுக்கென வழமையாக விடப்படும் விடுமுறைகள்யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாம்.

இதேசமயம் இந்தோனேஷியாவிலிருந்து வெளியேறி சிஙப்பூர் சேர்ந்த மற்றொரு குழுவினரான ஆயிரம் சீனர்கள், இந்தோனேஷியாவில் காயமடைந்தும் நோயுற்றும் இன்னும் பெருந்தொகையான சீனர் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## புத்தளத்தில் இளைஞர் சாதனை

புத்தளம், திங்கள்

இங்குள்ள இளைஞர் குடியேற்றத்திட்டத்தில் 2,300 ஏக்கர் காணி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இளைஞர் குடியேற்றத்திட்டத்தில் காணி அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பது இங்குதானென அறிவிக்கப்பட்டது.

உப உணவுப் பொருட்களும் நெல்லும் பயிரிடப்பட்டிருக்கிறது.

---

## விபத்தில் சிக்கிய கார்

பளை, திங்கள்

நேற்றுக்காலை தெல்லிப்பழை கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு முன்னால் நடந்த விபத்தில் 'வொக்சல்' கார் ஒன்று செங்குத்தான நிலையில் புரண்டிருந்தது காரின் முன்பக்கம் நிலத்திலும் பின்பக்கம் வானத்தைப் பார்த்தபடியும் இருந்தது. இக்காரில் வந்த லவோதியர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இத்தவிபத்து எப்படி நேர்ந்தது என்பது தெரிவிக்கப்படவில்லை.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 1-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org